# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 27, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தேசிய தேர்வு முகமையால் (என்டிஏ) நடத்தப்படும் தேர்வுகளில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து அரசுக்குப் பரிந்துரைக்க இன்ஃபோசிஸ் இணை நிறுவனர் நந்தன் நிலேகணி தலைமையில் புதிய பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

i. சென்னை ஐஐடி இயக்குநர் வி.கா மகோடி மற்றும் பல்வேறு துறைநிபுணர்களை உள்ளடக்கி, இந்த உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

ii. தில்லியில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி (சிஜேபி) தலைமையில் மாணவர்கள்-இளைஞர்கள் நடத்திய தொடர் போராட்டத்தால் மத்திய கல்வித் துறை அமைச்சர் பதவியில் இருந்து தர்மேந்திர பிரதான் விலகிய நிலையில், பிரதமர் இந்த முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

iii. நந்தன் நிலேகணி தலைமையில் குழு:

- தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் தேர்வுகளில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து அரசுக்குப் பரிந்துரைகளை வழங்க இன்ஃபோசிஸ் இணை நிறுவனர் நந்தன் நிலேகணி தலைமையில் புதிய உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இக்குழுவில் இஸ்ரோ முன்னாள் தலைவர் எஸ்.சோமநாத், புலனாய்வுத் துறை முன்னாள் இயக்குநர் தபன் குமார்டேகா, சென்னை ஐஐடி இயக்குநர் வி.காமகோடி, கல்வித் துறை முன்னாள் செயலர் அனிதா கர்வால், தளவாடங்கள்-நிர்வாகத் துறை நிபுணர் அம்ருத்லால் மீனா ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.

iv. பணிகள் என்னென்ன?:

- முறைகேடுகள் இல்லாத தேர்வு அமைப்பு முறையை நிறுவுவதற்காக, இந்தப் பணிக் குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய அரசு செயலாற்றும். தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் தேர்வுகளை தொழில்நுட்ப ரீதியில் மறுசீரமைக்கவும், கட்டமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும் இக்குழு உதவும். வலுவான- வெளிப்படையான தேர்வு அமைப்பு முறையை நிறுவுவதில்

தொழில்நுட்பங்களின் அதிகபட்ச பயன்பாடு குறித்த பரிந்துரைகளை வழங்கும் என்று பிரதமர் மோடிதெரிவித்துள்ளார்.

v. வினாத்தாள் கசிவு உள்பட அரசுத் தேர்வு முறைகேடுகளுக்கு கடும் தண்டனை விதிக்க வகை செய்யும் அரசுத் தேர்வுகள் முறைகேடுகள் தடுப்பு சட்டத் திருத்த மசோதா-2026, மக்களவையில் திங்கள்கிழமை (ஜூலை 27) தாக்கல் செய்யப்பட உள்ளது. அறிமுகம்- பரிசீலனை- நிறைவேற்றம் ஆகிய அலுவல்களுக்காக மசோதா பட்டியலிடப்பட்டுள்ளது.

vi. இந்த சட்டத் திருத்தத்தின் படி, வினாத்தாள் கசிவு அல்லது தேர்வு முறைகேடுகளில் ஈடுபடும் தனிநபர்களுக்கு குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையுடன் ரூ.50 லட்சம் வரை அபராதமும், முறைகேடு கும்பலால் திட்டமிட்டு அரங்கேற்றப்படும் குற்றங்களுக்கு குறைந்த பட்சம் 7 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையுடன் ரூ.10 கோடி வரை அபரர்தமும் விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையை விரைந்து முடிப்பதற்காக விரைவு நீதிமன்றங்கள் அமைப்பது உள்ளிட்ட அம்சங்களும் இடம்பெற்றுள்ளன.

2. ஸ்காட்லாந்தில் நடைபெறும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில், இந்திய பளுதூக்குதல் வீராங்கனை சாய்கோம் மீராபாய் சானு தங்கப் பதக்கம் வென்றார். நடப்பு காமன்வெல்த் போட்டிகளில் இந்தியாவுக்கு இது முதல் தங்கமாகும்.

i. மேலும், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் மீராபாய் சானு தொடர்ந்து வென்ற 3-ஆவது தங்கப் பதக்கம் இது. அவர் ஏற்கெனவே, 2018, 2022-ஆம் ஆண்டு போட்டிகளிலும் சாம்பியன் ஆனது குறிப்பிடத்தக்கது.

ii. தற்போது கிளாஸ்கோ நகரில் நடைபெறும் இந்த ஆண்டு போட்டியில் மகளிருக்கான 48 கிலோ எடைப் பிரிவில், மீராபாய் சானு மொத்தமாக 190 கிலோ எடையைத் தூக்கி முதலிடம் பிடித்தார்.

iii. அவர், ஸ்னாட்ச் பிரிவில் 85 கிலோ, கிளீன் & ஜெர்க் பிரிவில் 105 கிலோ எடையை வெற்றிகரமாகத் தூக்கினார்.

iv. ஸ்னாட்ச் பிரிவில் அவர் தூக்கிய எடை, காமன்வெல்த் சாம்பியன்ஷிப் மற்றும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் புதிய சாதனையாகும். அதேபோல், கிளீன் & ஜெர்க் பிரிவிலும், மொத்தமாகவும் அவர்

எட்டியிருக்கும் எடை, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் புதிய சாதனையாகும்.

v. மீராபாய் சானு ஏற்கெனவே, ஒலிம்பிக் வெள்ளி (2020), உலக சாம்பியன்ஷிப் தங்கம், வெள்ளி (2017, 2022), ஆசிய சாம்பியன்ஷிப் வெண்கலம் (2020), காமன்வெல்த் சாம்பியன்ஷிப் தங்கம் (2015, 2017, 2019) வென்றவர் என்பது நினைவு கூரத்தக்கது.

### 3. கர்நாடகம் காவிரி நீர் தர மறுத்துள்ள நிலையில், டெல்டா மாவட்டங்களில் குறுவையைத் தொடர்ந்து சம்பா சாகுபடிக்கும் சாதகமற்ற சூழல் நிலவுகிறது.

i. மேட்டூர் அணையில் போதுமான அளவுக்கு நீர் இருப்பு இல்லாததால், டெல்டா மாவட்டப் பாசனத்துக்காக ஜூன் 12-ஆம் தேதி திறக்கப்படவில்லை. இதனால், டெல்டா மாவட்டங்களில் கடந்த ஆண்டு 6.31 லட்சம் ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட குறுவை பருவநெல் சாகுபடி நிகழாண்டு ஏறத்தாழ 3.50 லட்சம் ஏக்கரை மட்டுமே எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ii. இதற்கும் காவிரி நீர் வராததாலும், போதுமான அளவுக்கு தென் மேற்கு பருவமழை பெய்யாததாலும் நிலத்தடி நீர் சரிந்து வருகிறது. இதனால், குறுவை சாகுபடி செய்யப்படும் சில இடங்களில் தண்ணீர் பற்றாக்குறை, ஆழ்குழாயில் உவர் நீர் போன்ற பிரச்னைகளால் நெற்பயிர்கள் பாதிக்கப்படுகின்றன.

iii. இந்நிலையில், புதுதில்லியில் ஜூலை 22- ஆம் தேதி நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில், தமிழ்நாட்டுக்குரிய காவிரி நீரை திறந்துவிட வேண்டும் என்ற கோரிக்கையை கர்நாடக அரசு வழக்கம் போல மறுத்துள்ளது. இதனால், டெல்டா மாவட்டங்களில் குறுவையைத் தொடர்ந்து சம்பா சாகுபடிக்கும் சாதகமற்ற சூழ்நிலையே நிலவுகிறது.

iv. 9.82 லட்சம் ஏக்கரில் எதிர் பார்ப்பு:

- டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் கடந்த ஆண்டு சம்பா-தாளடி சாகுபடி கிட்டத்தட்ட 10 லட்சம் ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டது. சம்பா சாகுபடியில் பெரும்பாலும் காவிரி நீரை ஆதாரமாகக்கொண்டு மேற்கொள்ளப்படுவது வழக்கம்.
- ஆனால், ஆகஸ்ட் மாதத்தில் சம்பா சாகுபடி தொடங்க வேண்டிய நிலையில், நிகழாண்டு காவிரி நீர் வரத்து இல்லாததால், அதற்கான

பணிகளைத் தொடங்கு வதற்கு விவசாயிகள் தயங்குகின்றனர். என்றாலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 3.25 லட்சம் ஏக்கரிலும், திருவாரூர் மாவட்டத்தில் 3.75 லட்சம் ஏக்கரிலும், நாகை மாவட்டத்தில் 1.12 லட்சம் ஏக்கரிலும், மயிலாடுதுறை மாவட்டத்தில் 1.70 லட்சம் ஏக்கரிலும் என மொத்தம் 9.82 லட்சம் ஏக்கரில் சம்பா தாளடி சாகுபடி மேற்கொள்ள வாய்ப்புள்ளது என வேளாண் துறையினர் தெரிவித்தனர்.

v. 190 டி.எம்.சி. தண்ணீர் தேவை:

- சம்பா தாளடி சாகுபடிக்கு ஏறத்தாழ 150 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படும். தற்போது ஆழ்குழாய் பாசனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் குறுவை சாகுபடிக்கும் ஏறக்குறைய 40 டி.எம். சி.யும் சேர்த்து மொத்தம்' 190 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படுகிறது. ஆனால், தற்போது மேட்டூர் அணையில் 36.44 டி.எம்.சி. மட்டுமே நீர் இருப்பு உள்ளது. இது, குடிநீருக்கு மட்டுமே போதுமானதாக இருப்பதால், இதை வைத்து பாசனத்துக்கு திறந்துவிடுவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.
- காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இனிமேல் பெருவெள்ளம் ஏற்பட்டு, கர்நாடக அணைகள் நிரம்பி வழிந்தால் மட்டுமே நிகழாண்டு மேட்டூர் அணை திறப்பதற்கான சாத்தியம் உள்ளது. ஆனால், அதற்கான வாய்ப்பும் இருப்பதாகத் தெரியவில்லை என்ற கருத்தும் நிலவுகிறது.

vi. தண்ணீர் பிரச்னை:

இதுகுறித்து மூத்த வேளாண் வல்லுநர் பி.கலைவாணன் தெரிவித்தது:

- காவிரி நீர் வராவிட்டால் ஆழ் குழாய் மூலம்தான் சம்பா சாகுபடி மேற்கொள்ள முடியும். ஆனால், தென் மேற்கு பருவ மழையும் எதிர்பார்த்த அளவுக்கு பெய்யாததால், நிலத்தடி நீர் மட்டமும் குறைந்து வருகிறது. இந்நிலையில், சராசரியாக 50 அடி ஆழத்தில் கடல் நீர் மட்டம் இருப்பதால், நிலத்தடி நீரை அதிகமாக உறிஞ்சி எடுக்க முடியாது.
- எனவே, தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தும் வகையில் செப்டம்பரில் மத்திய கால விதைரகங்களைப் பயன்படுத்தி நேரடி விதைப்பு செய்யலாம். மேலும், வட கிழக்குப் பருவ மழையும் கை கொடுத்தால் சம்பா சாகுபடியை வெற்றிகரமாக செய்ய முடியும். ஆனால், நிகழாண்டு எல்-நினோ நிலவுவதால், வடகிழக்கு பருவ மழை எப்படி அமையும் என்பதைக் கணிக்க முடியவில்லை.
- எனவே, சம்பா சாகுபடியில் தண்ணீர் பிரச்னை ஏற்பட வாய்ப்பிருக்கிறது

என்றார் கலைவாணன்.

vii. தொகுப்பு திட்டம் அவசியம்:

- டெல்டா மாவட்டங்களில் காவிரி நீர் வந்தால் மட்டுமே ஆற்றுப்பாசன விவசாயிகள், குறுவை சாகுபடி மேற்கொள்ளப்படுவது வழக்கம். காவிரி நீர் வராவிட்டால் ஆழ்குழாய் வசதியுள்ள விவசாயிகள் மட்டுமே குறுவை சாகுபடி செய்வர்.
- ஆனால், சம்பா சாகுபடியைப் பொருத்தவரை காவிரி நீர் வந்தாலும், வராவிட்டாலும் ஆழ்குழாய் விவசாயிகள் மட்டுமல்லாமல், ஆற்றுப் பாசனத்தைச் சார்ந்த விவசாயிகளும் பருவ மழை மீது நம்பிக்கை வைத்து சாகுபடி மேற்கொள்வர். இதற்காக பல விவசாயிகள் நிலத்தை உழுது வைத்து தயாராக இருக்கின்றனர்.
- எனவே, தண்ணீர் பிரச்னை உள்ள நிலையிலும் நெல் உற்பத்தியில் ஆர்வம் காட்டும் விவசாயிகளுக்கு அரசு துணையாக இருக்க வேண்டும்; அதற்கு தமிழக அரசு சம்பா தொகுப்புத் திட்டத்தை அறிவிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியுள்ளது.

viii. கர்நாடகத்திலுள்ள காவிரி அணைகளான கிருஷ்ணராஜசாகரில் 17.13 டி.எம்.சி.யும், கபினியில் 13.27 டி.எம்.சி.யும், ஹேரங்கியில் 7.5 டி.எம்.சி.யும், ஹேமாவதியில் 22.82 டி.எம்.சி.யும் என மொத்தம் 60.80 டி.எம்.சி. தண்ணீர் உள்ளது. உச்சநீதிமன்ற உத்தரவின்படி, விகிதாசார அடிப்படையிலும் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்பட வில்லை.

- தமிழகத்துக்கு ஜூன் மாதத்தில் 9.19 டி.எம்.சி.யும், ஜூலை மாதத்தில் 31.24 டி.எம்.சி.யும் என மொத்தம் 40.43 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்துக்கு வழங்க வேண்டும். ஆனால், ஜூன் முதல் இதுவரை 3.50 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே வந்துள்ளது.
- இந்நிலையில், தமிழகத்துக்கு தொடர்ந்து தண்ணீர் கிடைக்குமா என்ற சந்தேகமும் அச்சமும் தமிழக விவசாயிகளிடையே நிலவுகிறது.

## 4. சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து பூமிக்கு 3 விண்வெளி வீரர்கள் பாதுகாப்பாகத் திரும்பினர்.

i. விண்வெளியில் அமெரிக்கா, ரஷியா உள்ளிட்ட நாடுகள் கூட்டாக சேர்ந்து சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்துள்ளன. அந்த விண்வெளி நிலையத்தில் அமெரிக்க விண்வெளி வீரர் கிறிஸ் வில்லியம்ஸ், ரஷிய

விண்வெளி வீரர்கள் செர்கேய் குட் ஸ்வெர்ச்கோவ், செர்கேய் மிகேவ் ஆகியோர் 8 மாதங்களாகத் தங்கியிருந்து ஆய்வு மற்றும் பராமரிப்புப் பணிகளைச் செய்து வந்தனர்.

ii. இந்நிலையில், 3 பேரும் தங்கள் பணி முடிந்ததையடுத்து, சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து ரஷியாவின் சோயூஸ் எம்எஸ்-28 விண்கலம் மூலம் பூமிக்கு புறப்பட்டனர். அந்த விண்கலம் கஜகஸ்தானில் உள்ள தேஜிகாஸ்கானில் இருந்து தென்கிழக்கே தரையிறங்கியது. இதையடுத்து மூவரும் விண்கலத்தில் இருந்து பாதுகாப்பாக வெளியே வந்தனர்.

iii. 3 பேரில் வில்லியம்ஸ், மிகேவ் ஆகியோருக்கு இது முதல் விண்வெளிப் பயணமாகும். ஸ்வெர்ச்கோவுக்கு 2-ஆவது விண்வெளிப் பயணமாகும்.

5. சீனாவில் ‘நௌல்’ என்று பெயரிடப்பட்ட புயல் கரையைக் கடந்ததைத் தொடர்ந்து, பலத்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 10 பேர் உயிரிழந்தனர்.

i. பசிபிக் கடலில் உருவான நௌல் புயல், தென் சீனக் கடலை நோக்கி நகர்ந்து, சீனாவின் குவாங்டாங் மாகாணம் ஹுய்ஜோ நகரில் அதிகாலை சுமார் 3.50 மணியளவில் கரையைக் கடந்தது. அப்போது மணிக்கு 162 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசியதுடன், பல இடங்களில் பலத்த மழை பெய்தது.

6. உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் அனாஹத் சிங் (18) பட்டம் வென்றார். இப்போட்டியில் சாம்பியனான முதல் இந்தியராக அவர் வரலாறு படைத்தார்.

7. இந்தியாவின் புதிய ரூ.200, ரூ.500 நோட்டுகளுக்கு நேபாள அரசு 10 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது அனுமதியளித்துள்ளது.

i. இந்தியாவில் கடந்த 2016-ஆம் ஆண்டு நவம்பர் 8-ஆம் தேதி மத்திய அரசு, அப்போது புழக்கத்தில் இருந்த ரூ.500, ரூ.1,000 நோட்டுகளை செல்லாது என்று அறிவித்தது. அதன் பிறகு மத்திய அரசு புதிதாக ரூ.200, ரூ.500, ரூ.2,000 நோட்டுகளை அறிமுகம் செய்தது. இதையடுத்து நேபாளத்தில் அந்த நாட்டு அரசு இந்தியாவின் ரூ.100 நோட்டுகளை விட அதிக மதிப்புடைய நோட்டுகளுக்குத் தடை விதித்தது. ரூ.25,000 மதிப்புக்கு ரூ.100 மற்றும் அதை

விட குறைந்த மதிப்புடைய ரூ.50, ரூ.20 உள்ளிட்ட நோட்டுகளை மட்டும் நேபாளத்துக்கு எடுத்து வர அனுமதியளித்தது.

ii. இந்நிலையில், இந்திய ரூபாய் நோட்டுகளுக்கு விதித்த கட்டுப்பாடுகளை நேபாளம் தற்போது தளர்த்தியுள்ளது.

iii. அதாவது, இந்தியாவில் 2016- ஆம் ஆண்டு நவம்பர் 9-ஆம் தேதிக்குப் பிறகு வெளியிடப்பட்ட ரூ.200, ரூ.500 நோட்டுகளுக்கு நேபாளம் அனுமதியளித்துள்ளது. இதுகுறித்து நேபாள ராஷ்டிர வங்கி வெளியிட்டுள்ள அறிவிப்பில், ரூ.25,000 மதிப்புக்கு ரூ.200, ரூ.500 இந்திய ரூபாய் நோட்டுகளை கொண்டு வரலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

iv. அதேநேரத்தில் இந்திய ரூபாய் நோட்டுகளை இந்தியா தவிர பிற நாடுகளில் இருந்து நேபாளத்துக்கு கொண்டு வரக் கூடாதென்றும், அதேபோல் நேபாளத்திலிருந்தும் இந்திய ரூபாய் நோட்டுகளை இந்தியா தவிர பிற நாடுகளுக்கு எடுத்துச் செல்லக் கூடாதென்றும் நேபாள ராஷ்டிர வங்கி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.